ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1714/4 - 2011 ජූලි 11 වැනි සඳුදා - 2011.07.11
1714/4 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2010*

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பெசில் ரோஹண ராஜபக்ச ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் ,-*

*(1) தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தில் மேற்படிச் சட்டத்தின் நோக்கத்திற்கு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனம் காணப்பட்ட ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன்/ அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கும் கருத்திட்டத்தின் இயைபான தகவல் அடங்கிய அறிவித்தலொன்று 2011, ஏப்பிறல் 5 ஆந் திகதி கொண்ட 1700/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது எனவும்,*

*(2) தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன்/அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை செயல்நுணுக்க கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும்.*

*(3) மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் "தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டையில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன்/அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" என அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டும்; எனவும்*

*(4) மேற்கூறப்பட்ட "தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டையில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன்/அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்டக் கம்பனிக்கும் இடையில் கருத்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியாகிய 2011, பெப்புவரி 7 ஆந் திகதியிலிருந்து முப்பத்தாறு (36) மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியாகிய 2014, பெப்புருவரி 07 ஆந் திகதியன்று வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்க வேண்டும் எனவும்; அத்துடன்*

*(5) "தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டையில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன்/அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" தொடர்பில் இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்பு அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய*

ஏற்புடைத்தானதாகத் தொடங்குதல் வேண்டும் என்பதுடன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தலும் வேண்டும்; எனவும்

வெளிப்படுத்துகின்றேன்.

பெசில் ரோஹன ராஜபக்ச,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*11 யூலை, 2011*

**அட்டவணை**

"தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டையில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் வதிவிடக்கூறுகளையும் அத்துடன் அல்லது நவீன விடுமுறை இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்திற்கு" வழங்கப்படவுள்ள விலக்களிப்புகள்.

1. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்

கம்பனி வரி விதிக்கப்படற்பாலதான இலாபமிடும் முதலாம் (1) ஆம் ஆண்டு அல்லது வர்த்தக ரீதியிலான தொழிற்பாடுகள் தொடங்கிய பின்னர் மூன்று (03) ஆண்டுகள் என்பனவற்றுள் எந்த ஆண்டு முதலில் வருகின்றதோ அந்த ஆண்டு தொடக்கம் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் பத்து (01) ஆண்டு கூட்டிணைப்பு வருமான வரி விடுமுறைக் காலப்பகுதியொன்று அதன் பின்னர் வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் கடைசி திகதியை உடனடுத்துவரும் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட மேலும் ஒரு காலப்பகுதிக்கு வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தாகும் வரி வீதத்தின் அரைவாசியாகிய (6%) சத வீத்திற்குச் சமமாக பகுதியளவிலான விலக்களிப்பொன்று வழங்கப்படும் ஐமிச்சத்தைத் தவிர்ப்பதற்கு மேலே தரப்பட்டுள்ளவாறு இருபத்தைந்து (25) ஆண்டுகள் முடிவுற்றதன்பின்னர் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கம்பனி தொடர்பில் அப்போது நிலவும் பொது வரி அமைப்பு முறை ஏற்புடையதாதல் வேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டம்.

இலாபங்களிலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபங்கள் மீதான வரி மேற்படி பத்து (10) ஆண்டுகளின் போதும் அதன் பின்னர் ஒரு (01) ஆண்டிற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

கம்பனியளின் அதிகபட்ச எண்ணிக்கையிலான இருபது (20) வெளிநாட்டுப் பயணியாட்டொகுதியினருக்கு உழைக்கும்போதே செலுத்தும் வரியிலிருந்து (Paye Tax) ஐந்து (05) ஆண்டு விலக்களிப்பு ஏற்புடையதாதல் வேண்டும்.

கம்பனி பின்வருவனவற்றின் மீது பிடித்து வைக்கும் வரி கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(அ) மூலதன செலவினத்திற்கு எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி ;

(ஆ) ஆலோசர்களுக்கு தொழில்நுட்பக் கட்டணங்கள் ;

(இ) முகாமைத்துவக் கட்டணங்கள், புனைவுரிமைத் தொகைகளின் கொடுப்பனவுகள் அத்துடன் சந்தைப்படுத்தும் கட்டணங்கள்;

ஆயினும் இக்கொடுப்பனவுகள் சங்ரி-லா ஏசியா லிமிட்டெட்டின் பின்வரும் துணை நிலைகளுள் ஒன்றுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

* சங்ரி-லா இன்டர்நெஷனல் ஹோட்டல் மனேஜ்மன்ட் லிமிட்டெட் - ஹொங்கொங்
* சங்ரி-லா இன்டர்நெஷனல் ஹோட்டல் மனேஜ்மன்ட் - பீவி
* சங்ரி-லா இன்டர்நெஷனல் ஹோட்டல் மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் - சிங்கப்பூர்

ஆயினும் கட்டணங்கள் அடிப்படை முகாமைத்துவக் கட்டணங்கள்/புனைவுரிமைத் தொகைகள் என்ற வகையில் மொத்தத் தொழிற்பாட்டு வருமானங்களின் மூன்று (3%) சதவீதத்தை விஞ்சமாட்டாது. அத்துடன் சந்தைப்படுத்தும் கட்டணங்கள், ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் என்ற வகையில் மொத்தத் தொழிற்பாட்டு இலாபங்களின் பத்து (10%) வீதத்தில் மொத்தத் தொழிற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து சதவீதத்தை (1.5%) விஞ்சமாட்டாது.

2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம் (சே. பெ.வ.)

கருத்திட்ட நிர்மாணக் காலப்பகுதியின் போது கருத்திட்டம் சார்ந்த பண்டங்களின் இறக்குமதியின் மீதும் கருத்திட்டம் சார்ந்த பண்டங்களினதும் சேவைகளினதும் உள்ளூர் கொள்வனவுகள் மீதும் சேர் பெறுமதி வரியின் (சே. பெ.வ.) கொடுப்பனவு.

3. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள், விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.

கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் நிர்மாணக் காலப்பகுதியின் போது ஏற்புடைத்தலாகா.

4. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் நிர்மாணக் காலப்பகுதியின் போது கருத்திட்டத்தின் நோக்கங்களுக்கு அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் எல்லா மூலதனப் பண்டங்களுக்கும் சுங்கத் தீர்வையிலிருந்தான விலக்களிப்பு ஏற்புடையதாகும்.

7-624

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.